நகராட்சி அலுவலகம், ஆத்தூர்,
(சேலம் மாவட்டம்),
நாள்.12 .10.2021.

அவசரக்கூட்டம்

அன்புடையீர்,

2021ம் வருடம் அக்டோபர் மாதம் 12.10.2021ந் தேதி செவ்வாய் கிழமை அவசரக் கூட்டம் காலை11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலித்து முடிவு செய்ய இருக்கிறது.

தனி அலுவலர்,
ஆத்தூர் நகராட்சி.

பொருள்கள்

1. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.21287/2021/EA2 நாள்.02.10.2021–இல் தெரிவித்துள்ளவாறு வெளிக்கொணர்வு முகமை மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பணியாளர்கள் பணியமர்த்துதல் தொடர்பாக அளவு கோல்கள் நிர்ணயம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த அளவு கோலின்படி இந்நகராட்சிக்கு கீழ்க்கண்டவாறு பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

| S.No. | Items | Requirements | Present Strength | Balance Needed |
|---|---|---|---|---|
| 1. | BOV | 31 | 23 | 8 |
| 2. | LCV | 9 | 4 | 5 |
| 3. | HCV | 0 | 3 | 0 |
| 4. | Tractor | 1 | 0 | 1 |
| 5. | Bobcat | 1 | 0 | 1 |
| 6. | Cleanliness Worker | 156 | 119 | 37 |
| 7. | Supervisor | 16 | 8 | 8 |
| 8. | Driver | 11 | 3 | 8 |

மேற்கண்ட பணியாளர்களுக்கு ஒருநாளுக்காக ஊதிய விபரம் பின்வருமாறு:

| Sl.No | Details of the payment | Cleanliness Workers | Supervisor | Driver |
|---|---|---|---|---|
| 1 | Basic salary for one day | 391 | 448 | 708 |
| 2 | Service charge for the agency including the cost of uniforms and other safety items required to be given to the supplied manpower | 27.37 | 31.36 | 49.56 |
| 3 | GST on Basic salary of the man power and on the service charge of agency (18 % of A and 18 % of service charge) | 75.31 | 86.28 | 136.36 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | Employer contribution for EPS 8.33%, EPF 3.67%, EPF admin 0.5% and EDLI 0.5% | 50.83 | 58.24 | 92.04 |
| 5 | Employer contribution of ESI 3.25% of | 12.71 | 14.56 | 23.01 |
| 6 | Total cost | 557.21 | 638.44 | 1008.97 |

இதன்படி மேற்படி பணியாளர்களை மூன்றாண்டுகளுக்கு தொடர்ந்து பணியமர்த்தும் போது ஏற்படும் உத்தேச செலவினம் பின்வருமாறு:

| Sl. No | Name of the Post | Basic Salary per day per person as per SoR or as approved in Rs | Total salary per day per person (col No.3 *1.4251) Rs. | Total salary per amount per person Rs. | Total salary per annum per person Rs .in lakhs | No. of person to be engaged | Total Budget to be provided per year Rs in Lakhs | Total Value to be put in to tender Rs In lakhs |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1 | Sanitary worker | 391 | 557.2141 | 16716 | 2.06 | 37 | 76.22 | 0.762 |
| 2 | Supervisor | 448 | 638.4448 | 19153 | 2.30 | 8 | 18.4 | 0.184 |
| 3 | Driver | 708 | 1008.9708 | 30269 | 3.63 | 8 | 29.04 | 0.290 |
| Total | | | | | | | 123.66 | 1.565 |

எனவே ஆத்தூர் நகராட்சிக்கு தேவைப்படும் தூய்மை பணியாளர்கள் 37 நபர்கள், மேற்பார்வையாளர்கள் 8 நபர்கள் மற்றும் ஓட்டுநர்கள் 8 நபர்கள் ஆகியோர்களை வெளிக்கொணர்வு முகமை (Outsource) மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் முதன்மை அனுமதி பெற்று பணியமர்த்தி கொள்ளவும், இதன் பொருட்டு மூன்று ஆண்டுகளுக்கு ஏற்படும் உத்தேச தொகை ரூ123.66 இலட்சம் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்படி பணிக்கான நிதி ஒதுக்கீடு செய்ய கருத்துருக்கள் அனுப்பவும் பரிந்துரை செய்ய தனிஅலுவலர் அனுமதிக்கலாம்.

2. ஆத்தூர் நகராட்சி தேர்வுநிலை நகராட்சியாகும். 2011 கணக்கெடுப்பின் படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 61793 ஆகும். இந்நகராட்சியின் பரப்பளவு 27.62 சதுர கிலோமீட்டர் கொண்ட 33 வார்டுகளை உள்ளடக்கியதாகும். இந்நகரில் நாளொன்றுக்கு 5.50 எம்.எல்.டி குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.இதில் 5.00 எம்.எல்.டி காவேரி கூட்டு குடிநீர்திட்டம் மூலம் 0.50 எம்.எல்.டி உள்ளூர் ஆதாரம் மூலம் பெறப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.இந்நகராட்சியில் 9 மேல்நிலை நீர் தேக்கதொட்டிகள் உள்ளது. அதன் கொள்ளளவு 40.00 இலட்சம் லிட்டர் ஆகும். இந்நகராட்சி குடிநீர் விநியோகத்திற்கு 182 பகிர்மான குழாய் வால்வுகள் பயன்பாட்டில் உள்ளது நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 21787/2021/ EA2 நாள் –02.10.2021ல் குடிநீர் வழங்கல் மற்றும் தொடர்புடைய கட்டமைப்புகளை இயக்கி பராமரிக்க பணியாட்கள் அளவுகோல்கள் விவரம் கீழே கண்டவாறு பட்டியல் வழங்கப்பட்டுள்ளது.

**இந்நகராட்சியின் குடிநீர் வழங்கல் மற்றும் தொடர்புடைய கட்டமைப்புகளை இயக்கி பராமரிக்க அளவுகோல் படி தேவைப்படும் பணியாட்கள்**

| வ.எண் | பணியின் விவரம் | அளவுகோல் படி தேவைப்படும் பணியாட்கள் | தற்போது பணிபுரியும் பணியாட்கள் | தேவைப்படும் பணியாட்கள் |
|---|---|---|---|---|
| 1 | நீரேற்று நிலையத்தை இயக்கி பராமரித்தல் | | | |
| | முட்டல் தலைமை நீரேற்று நிலையம் – 1 | | | |
| | 1. மின்னாளர் | 3 | 0 | 3 |
| | 2. பராமரிப்பு உதவியாளர் | 3 | 0 | 3 |
| 2 | மேல்நிலை தொட்டிகள்,தரைமட்ட தொட்டிகள் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய்கள் தொடர்புடைய பணிகள் | | | |
| | 1.00 LL முதல் 2.00 LL க்கு குறைவான கொள்ளவு தொட்டி இருப்பிடத்திற்கு பராமரிப்பு உதவியாளர்–1 | 3 | 0 | 3 |
| | 1.உப்பு ஓடை– 1.00 LL<br>2.நாராயணபுரம்–1.00 LL<br>3.குமணன் தெரு –2.00 LL | | | |
| | 2.00 LL முதல் 5.00 LL வரை கொள்ளவு கொண்ட தொட்டி இருப்பிடத்திற்கு பராமரிப்பு உதவியாளர்–2 | | | |
| | 1.அம்பேத்கர் நகர் டேங் –2.50 LL<br>2.முல்லை வாடி டேங் –2.50 LL | 4 | 0 | 4 |
| | 5.00 LL க்கு அதிக கொள்ளவு கொண்ட தொட்டி இருப்பிடத்திற்கு பராமரிப்பு உதவியாளர்–3 | 9 | 0 | 9 |
| | 1.காந்தி நகர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி பழைய டேங்–7.50 LL<br>2.காந்தி நகர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி புதிய டேங்–7.50 LL<br>3.கடைவீதி மேல் நீர்தேக்க தொட்டி –7.50 LL | | | |
| | பகிர்மான குழாய்கள் இல்லாத பகுதிகளில் லாரிகள் மூலம் குடிநீர் வழங்கல் | 3 | 2 | 1 |
| | | | | |
| | மொத்தம் | 25 | 2 | 23 |

## Manpower Abstract

| வ.எண் | பணியின் விவரம் | அளவுகோல் படி தேவைப்படும் பணியாட்கள் | தற்போது பணிபுரியும் பணியாட்கள் | தேவைப்படும் பணியாட்கள் |
|---|---|---|---|---|
| 1 | நீரேற்று நிலையத்தை இயக்கி பராமரித்தல் | | | |
| | 1. மின்னாளர்<br>2. பராமரிப்பு உதவியாளர் | 3<br>3 | 0<br>0 | 3<br>3 |
| | மேல்நிலை தொட்டிகள்,தரைமட்ட தொட்டிகள் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய்கள் தொடர்புடைய பணிகள் | | | |
| | 1.00 LL முதல் 2.00 LL க்கு குறைவான கொள்ளவு தொட்டி இருப்பிடத்திற்கு பராமரிப்பு உதவியாளர்–1 | 3 | 0 | 3 |
| | 2.00 LL முதல் 5.00 LL வரை கொள்ளவு கொண்ட தொட்டி இருப்பிடத்திற்கு பராமரிப்பு உதவியாளர்–2 | 4 | 0 | 4 |
| | 5.00 LL க்கு அதிக கொள்ளவு கொண்ட தொட்டி இருப்பிடத்திற்கு பராமரிப்பு உதவியாளர்–3 | 9 | 0 | 9 |
| | பகிர்மான குழாய்கள் இல்லாத பகுதிகளில் லாரிகள் மூலம் குடிநீர் வழங்கல் | 3 | 2 | 1 |
| | மொத்தம் | 25 | 2 | 23 |

Working Estimate for Outsourcing of Operation and Maintenance of Water Supply Improvement Scheme in Attur Municipality

| வ.எண் | பணியாளரின் பதவி விபரம் | எண்ணிக்கை (Nos) | நாள் | அடிப்படை ஊதியம் ஒன்றுக்கு Rate Rs. P. | ஒரு மாதத்திற்கு | தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| 1 | மின்னாளர் | 3 | 30 | 712.00 | Month | 64080.00 |
| 2 | பராமரிப்பு உதவியாளர் (Maintenance Assistant) | 19 | 30 | 520.65 | Month | 296771.00 |
| 3 | துலக்குனர் | 1 | 30 | 396.00 | Month | 11880.00 |
| 3 | **Sub Total I Per month** | 23 | | | | 372731.00 |
| 4 | **Total estimated cost including GST, EPF, ESI, EPF admin, EDLI and agency charges** | | | | | 158410.46 |
| | | | | | | |
| | **Sub Total II a Per month** | | | | | 531141.46 |
| | **Total (Per Month)** | | | | | 531141.00 |
| | **Total (Per Year)** | | | | | 6373692.00) |
| | | | | | | 63.74 **Lakhs** |

எனவே குடிநீர் தங்கு தடையின்றி வழங்கவும் மேற்கண்ட பணி ஒதுக்கீட்டு அட்டவணைப்படி பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் நியமனம் செய்ய உரிய வழிமுறைகள் வழங்கப்பட்டதன் பேரில் இந்நகராட்சி குடிநீர் விநியோகம் வெளிக்கொணர்வு முகமை மூலம் நியமனம் செய்ய குடிநீர் விநியோக பராமரிப்பிற்கு ஆண்டு ஒன்றிற்கு ரூ. 63.74 இலட்ச செலவினத்திற்கு மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. குடிநீர் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள 23 நபர்களை 3 வருடம் பணியில் ஈடுபடுத்த நகராட்சி ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஒப்பந்தம் செய்யும் நாளிலிருந்து 1 ஆண்டு முடியும் போது பணித்திறன் மதிப்பீடு செய்து ஒப்பந்தத்தொகை உயர்வு செய்து மன்ற ஒப்புதலுடன் ஒப்பந்தம் புதுப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. ஒப்பந்தம் மேற்கொள்ளும் நாளிலிருந்து ஒரு வருடம் காலத்திற்கான உத்தேச செலவின தொகை ரூ. 63.74 இலட்சத்திற்கு குடிநீர் நிதியிலிருந்துமேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண் 306/2021/இ2)

3. ஆத்தூர் நகராட்சி 33 வார்டு பகுதிகளிலும் உள்ள தெருவிளக்குமொத்தம் 2154 இதனை தினசரி ஒளிர வைக்க நகராட்சியில் பணியாளர்கள் இல்லாத காரணத்தால், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21787/2021/இஏ-2, நாள்02.10.2021ல் வழங்கியுள்ள வழி முறைகளுக்கு இணங்க, வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை அமர்த்தி பணி மேற்கொள்ள ஆகும், உத்தேச செலவினம் ரூ.23.09 இலட்சத்திற்கு ரூபாய் இருபத்தி மூன்று இலட்சத்து ஒன்பதாயிரம் மட்டும்) தனிஅலுவலவர் தீர்மானம்எண்203, நாள்12.10.2021ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு பிரேரனை சமர்ப்பிக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அலுவலகத்தின் கூர்ந்தாய்வில் தற்போது தேவைப்படும் திருத்திய மதீப்பீட்டில் பிரேரனை சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டது. அதன்படி தற்போது திருத்திய மதீப்பீடு ஓராண்டிற்கு ரூ.20,17,000/—க்கும் (ரூபாய் இறுபது லட்சத்து எழுபதினேழாயிரம் மட்டும்), அதற்கான நிர்வாக அனுமதி வேண்டி, கருத்துருவை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கவும் தனிஅலுவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. தனிஅலுவலர் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தனிஅலுவலர் அனுமதிக்கலாம்.

4. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்காக மூன்றாம் அலையினை தடுக்க பொது மக்களுக்கு தடுப்பூசி பெரு முகாம் நடத்த 15 பூத்துகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 15 பூத்துகளுக்கும் விளம்பர பேனர்கள் மற்றும் 5 பெரிய பேனர்கள் பிரிண்டு செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,000/—க்குள் மேற்கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளி பெறவும் தனி அலுவலரின் முன் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மேற்கண்ட பேனர்களுக்கு ஆகும் செலவினத்தொகை ரூ.5,000/—ஐ தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. செலவினத் தொகையை பேரிடர் மேலாண்மை நிதி அல்லது நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம் **(ந.க.எண்818/2020/எச்1).**

5. ஆத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் டெங்கு நோய் தடுப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் 60 DBC பணியாளர்கள் டெங்கு நோய் தடுப்பு பணி செய்து வருகின்றனர். இதற்காக DBC பணியாளர்களுக்கு மாதம் 6–இலட்சம் ஊதியமாக வழங்கப்படுகிறது.

தற்சமயம் இந்நகராட்சியில் போதிய நிதி இல்லாத காரணத்தினாலும், நிதி பற்றாக்குறை காரணமாகவும் மேற்கான் பணியாளர்களுக்கு மாத ஊதியம் வழங்க இயலவில்லை. எனவே, நிதி நிலைமையை கருத்திற்கொண்டும், நிர்வாக நலன் கருதியும், டெங்கு நோய் தடுப்பு பணிகளுக்கு 40 DBC பணியாளர்களை கொண்டு பணிகளை மேற்கொள்ளவும், இதில் 3 DBC பணியாளர்களுக்கு முழுநேர பணியாக தினக்கூலி ரூ. 356 வீதமும், 37 DBC பணியாளர்களுக்கு பகுதிநேர பணியாக தினக்கூலி ரூ.178 வீதமும், ஞாயிற்றுக்கிழமை விடுமுறையாக அறிவித்தும், மாதத்தில் 26–நாட்களுக்கு மாத ஊதியமாக கணக்கிட்டு வழங்கவும், அதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும், நகர மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவும், ஊதியமும் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
4. சிறப்பு பணியின்போது பகுதி நேர பணியாளர்களுக்கு முழுநேர வேலை நாளாக கருதி ரூ. 356 தினக்கூலியாக வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

6. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான ஆத்தூர் அரசு மருத்துவமனை வளாகத்தில் DAY-NULM SCHEME–Special Shelter திடத்தின் கீழ் ஆத்தூர் அரசு மருத்துவ மனையில் தங்கி சிகிச்சை பெறும் உள் நோயாளிகளின் உறவினர்கள் தங்கும் அறை கட்டுதல் பணி மற்றும் 15வது நிதி குழு மான்யம் Tied Grantன் இரண்டாவது தவணைத் தொகையின் கீழ் இலகுரக வாகனம் (BOV) (பேட்டரியால் இயங்கும் வாகனம்) 15 எண்ணிக்கை கொள்முதல் செய்தல் ஆகிய பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தமிழ் மற்றும் ஆங்கில நாழிதழ்களில் மாநில அளவில் இயக்குநர் செய்தி மக்கள் தொடர்பு துறை ,சென்னை அவர்களின் வாயிலாக ஒரு நாள் மட்டும் பொது மக்கள் அறியும் வண்ணம் விளம்பரம் செய்ததற்கு விளம்பரம் செய்த நிறுவனமான கண்ணன் அட்வர்டைசிங் (பி) லிமிடெட் சென்னை என்ற நிறுவனத்திற்கு விளம்பர கட்டணம் ரூ.79,695/- ஐ வழங்க தனி அலுவலர் ஒப்புதலுக்கு வைக்கப் படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

2. செலவினத்தை பொது நிதியில் இருந்து வழங்கவும் தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.4058/2019/இ1)

7. ஆத்தூர் நகராட்சியில் (2017–2018 முதல் 2019–2020) வரை மூன்று ஆண்டில் செய்யப்பட்ட வளர்ச்சி திட்ட பணிகளை பொதுமக்கள் அறியும் வண்ணம் தொழில் மலர்–2020ல் மாலைமலர் நிறுவனத்தார் மூலம் விளம்பரம் செய்ததற்கான செலவினத் தொகை ரூ.19800/–ஐ விளம்பரம் செய்த மாலைமலர் நிறுவனத்தாருக்கு வழங்க தனி அலுவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. தனிஅலுவலர் அனுமதிக்கலாம்.

2. செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம். (2035/2021/இ1)

8. ஆத்தூர் நகராட்சியில் கடந்த மூன்று ஆண்டுகளில் (2017–2018 முதல் 2019–2020) வரை மூன்று ஆண்டுகளில் செய்யப்பட்ட வளர்ச்சி திட்ட பணிகளை பொதுமக்கள் அறியும் வண்ணம் தினதந்தி நாளிதழில் 28.06.2020 அன்று விளம்பரம் செய்ததற்கான செலவினத் தொகை ரூ.55,223/–ஐ வழங்க தனி அலுவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. தனிஅலுவலர் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம். 1758/2020/இ1)

9. ஆத்தூர் நகராட்சியின்2020–2021ம் ஆண்டு கணக்குகள் வருவாய்நிதி ,குடிநீர் நிதி கல்வி நிதி ஆகியவற்றிக்கு தனித்தனி CWBS மூலம் தயார் செய்து வழங்கும் பணிக்கு தனியார் கணக்கர் மூலம் மேற்கொள்ள முன் அனுபவம் உள்ளவர்களிடம் இருந்து விலைப் புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் விபரப்படி மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இதனை தனிஅலுவலரின் பார்வைக்கு ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | தொகை குறைவு/ அதிகம் |
|---|---|---|
| 1 | திரு.மு.அம்பேத்கார்,<br>106 அண்ணாநகர் வழப்பாடி, | ரூ.90,000/– குறைவு |
| 2 | திரு.மு.அம்பேத்கார்,<br>106 சுப்பராய தெரு, வழப்பாடி, | ரூ.95,000/– அதிகம் |
| 3 | திரு.அ.ஆசைதம்பி<br>ராமன் நகர் பி.என்பட்டி, | ரூ.91,000/– அதிகம் |

அலுவலகக் குறிப்பு

1. மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று விலைப் புள்ளிகளில் திரு.மு.அம்பேத்கார், 106 அண்ணா நகர் வழப்பாடி என்பவரின் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ளதை தனி அலுவலர் ஏற்கலாம்.

2. மேற்படி நபர் ஏற்கனவே உள்ளாட்சி அமைப்புகளுக்கு கணக்குகள் தயார் செய்து வருவதாலும் ஆத்தூர் நகராட்சிக்கு கடந்த ஆண்டுகளாக தயார் செய்து வழங்கி வருதாலும் ஆண்டு கணக்குகளை முழு அளவில் ஜீன் மாதத்தில் உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு ஒப்படைக்க வேண்டியுள்ளதால் அவசர அவசியம் தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று உத்திரவு வழங்கியதையும் அங்கீகரிக்கலாம்.

9. இதற்கான செலவினம் ரூ.50,000/-ஐ கல்வி நிதியிலிருந்து வழங்கவும் தனி அலுவலர் ஏற்கலாம். (ந.க.எண்.1062/2020/இ2)

10. ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மேட்டூர் ஆத்தூர் கூட்டு குடிநீர் வழங்கல் பணிக்கு தேவையான கிருமி நாசினி செய்ய Sodiumhypo chloride (Liquid chlorine) திரவ குளோரின் சப்ளை செய்தல் பணிக்கு, ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு தனி அலுவலர் தீர்மானம் எண்165, நாள்31.08.2021ல் ஒப்புதல் வழங்கப்பட்டதன் பேரில், மேற்படி பணிக்கு 16.09.2021ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய தனி அலுவலரின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

கீழ்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. எ.லோகநாதன்,

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் | சதவீதம் அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | திரு.எ.லோகநாதன், ஒப்பந்ததாரர், ஆத்தூர் | 0.03%மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.ஆர்.செல்லக்கண்ணு ஒப்பந்ததாரர், ஆத்தூர் | 1.11% மதிப்பீட்டை விட அதிகம் |

ஆத்தூர் என்பவரின் 0.03% மதிப்பீட்டு விலையைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை குறித்து முடிவு செய்ய தனி அலுவலரின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.03% மதிப்பீடு விலை விகிதத்திற்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், திரு.எ.லோகநாதன், ஆத்தூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை தனி அலுவலர் ஏற்கலாம். பணி மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கவும், தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

2. குடிநீரின் அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், திரு.எ.லோகநாதன், ஆத்தூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை தனி அலுவலர் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.2510/2021/இ2)

11. அரசாணை (Ms ) No 70 Dated.13.09.2021ன்படி ஆத்தூர் நகராட்சியில் கலைஞர்நகர்ப்புறமேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் சாலைப் பணிகளை மண்சாலைகளை தார்சாலைகளாக மாற்றம் செய்தல், மண்சாலைகளை சிமெண்ட் சாலைகளாக மாற்றம் செய்தல் மற்றும் மண் சாலைகளை பேவர் பிளாக் சாலைகளாக மாற்றம் செய்தல் மற்றும் பழுதடைந்த சாலைகளை புனரமைப்பு பணிகள் செய்தல் ஆகியன செய்வதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள பணிகளுக்கு தயார் செய்துள்ள திட்ட மதிப்பீடுகள் மற்றும் கருத்துருக்களை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பித்து இப்பணிகளுக்குரிய நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி பெறுவதற்கு தனி அலுவலரின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| Sl. No | Ward No | Uni coad No | Name of the Work | Existing Road | Proposed Surface | Length in M | Width in M | Estimate Amount Rs in Lakhs |
|---|---|---|---|---|---|---|---|---|

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2,3 &4 | 045002R40<br>045003R77<br>045003R78<br>045003R79<br>045003R80<br>045003R81<br>045003L09<br>045003S17<br>045003S18<br>045003S19<br>045003S20<br>045003S21<br>045004R99 | Providing BT Road at State bank Colony,Poonga Nagar,Rajamani Nagar and Subramaniya Nagar Ward No 2,3 & 4 | Earthan | B.T | 1859 | 4.20 | 120.00 |
| 2 | 33 | 045033R514<br>045033R516<br>045033R530<br>045033R531<br>045033R536<br>045033R555<br>045033R563 | Providing BT Road at Anna Nagar N-S 1st cross E-Side 1st cross, W-Side 1st cross Kannadimill N-S 3rd cross W-Side 2nd cross and 3rd cross , Housing board road S/S W-E 3rd cross( River side),Paithur road 2nd cross(V.V.Colony) and Thirumalai Nagar 1st Main road Ward No 33 | Earthan | B.T | 1485 | 4.20 | 96.00 |
| 3 | 1 & 2 | 045001R19<br>045001R25 | Providing Paver Block Road to Perumal koil North Main road South | Earthan | PAVER | 754 | 4.00 | 56.00 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 045001R26<br>045001R27<br>045002R46 | side 2nd cross 1st cross street ,Kottai Amman Nagar and Vadugampatty Kaliamman koil road Cross street Ward No-1&2 | | | | | |
| 4 | 4,7,8 & 31 | 045004R92<br>045007R142<br>045007R143<br>045008R160<br>045031R456<br>045031R457 | Providing Paver Block Road to kaliangar Colony N/S 4th cross,Krishna Theater Opposite 1st Cross Main road.,1st cross West side 1st street.,Lakshmi puram Sadagopan street Link road,Sivasakthi Nagar 1st cross street and Sivasakthi Nagar 2nd cross street Ward No-4,7,8 & 31 | Earthan | PAVER | 499 | 4.00 | 38.50 |
| | | | | | TOTAL | 4597 | - | 310.50 |

1) PARK.

| Sl.No | Name of the Work | Nos. | Estimate Amount in Lakhs |
|---|---|---|---|
| 1 | Providing Compound wall and Children's Playing arrangements to Kannadimill Anna Nagar Municipal Park TS No-144/1,Block-4,Ward No-E | 1 No | 67.00 |

அலுவலகக் குறிப்பு

1.தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

2.நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு தயார் செய்துள்ள திட்ட மதிப்பீடுகள் மற்றும் கருத்துருக்களை மேலானுப்பி இப்பணிகளுக்குரிய நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி பெறுவதற்கு தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம். (2593/2021/இ1)

அ. [signature] 12/10/21

தனி அலுவலர்,

ஆத்தூர் நகராட்சி.

[initials] 12/10/21

நகராட்சி அலுவலகம், ஆத்தூர்,
(சேலம் மாவட்டம்),
நாள்.29 .10.2021.

இயல்புக்கூட்டம்

அன்புடையீர்,

2021ம் வருடம் அக்டோபர் மாதம் 29.10.2021ந் தேதி வெள்ளி கிழமை இயல்புக் கூட்டம் காலை11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலித்து முடிவு செய்ய இருக்கிறது.

தனி அலுவலர்,
ஆத்தூர் நகராட்சி.

பொருள்கள்

1. ஆத்தூர் நகராட்சி பகுதிக்குள் அரசால் இணக்கம் அளிக்கப்பட்டுள்ள விரிவு அபிவிருத்தி திட்டம் எண் 4ல் அமையும் CC 40 அடி அகல திட்ட சாலையில் அமையும் திரு ச.அறிவழகன் த/பெ சண்முகம் அவர்கள் தமது இடத்தினை ஆத்தூர் நகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்திட அனுமதி கோரி விண்ணப்பத்திள்ளார். உத்தேச இடம் ஆத்தூர் வருவாய் கிராமம் வார்டு F, பிளாக் எண் 8, நகரளவை எண் 6/6ல் 12 அடி அகல பாதையாக உள்ளது. மேற்படி பாதையினை அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்ட வரைபடத்தில் தனியார் பாதை என திட்ட சாலைக்குள் காண்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி பாதை நிலையிலுள்ள மாநில நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான பெரம்பலூர் சாலையிலிருந்து பிரிந்து செல்கிறது. மேற்படி CC 40 அடி அகல திட்ட சாலை உள்ளூர் திட்டக் குழுமத்தால் அமைக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளதால் மனுதாரர் தானமாக வழங்க முன் வருவதால் தானமாக பெறலாம். மேலும் சை திட்ட சாலையினை தானமாக பெறப்பட்டால் நெடுஞ்சாலையிலிருந்து அப்பகுதிக்குள் செல்ல ஒரு புதிய அணுகு பாதை கிடைக்கப்பெறுவதுடன் அப் பகுதிகள் பிற்காலத்தில் வளர்ச்சி அடைய ஏதுவாக இருக்கும். எனவே மனுதாரருக்கு சொந்தமான 12 அடி அகல பாதையினை (திட்ட சாலை) தானமாக பெற தனி அலுவலர் ஒப்புதல் கோரப்படுகிறது

<u>அலுவலகக்குறிப்பு.</u>

தனி அலுவலர் அனுமதிக்கலாம் (நக.எண்.336/2021/எப்1)

2. ஆத்தூர் நகராட்சியில் (2017–2018 முதல் 2019–2020) வரை மூன்று ஆண்டில் செய்யப்பட்ட வளர்ச்சி திட்ட பணிகளை பொதுமக்கள் அறியும் வண்ணம் மாலைமலர் தினசரி நாளிதழில் தொழில் மலரில் 13.09.2021 அன்று விளம்பரம் செய்ததற்கான செலவினத் தொகை ரூ.19,800/–ஐ விளம்பரம் செய்த மாலைமலர் நிறுவனத்தாருக்கு வழங்க தனி அலுவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம். (3162/2021/இ1)

3. ஆத்தூர் நகராட்சியில் சிறப்பு சாலைகள் திட்டம் – 2020–2021ன் கீழ் 7.00 கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலைகளை மேம்படுத்துதல் பணிக்கு நகராட்சி நிவாக ஆணையர் சென்னை அவர்களின் செயல் முறை கடிதம் ந.க.எண்2055/2020/இ3, நாள்:15.12.2020ல் கீழ்கண்ட விபரப்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| சிப்பம் எண் | பணியின் பெயர் | எடுத்துக் கொள்ளப் பட்ட பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீட்டு தொகைரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19 பாரதியார் தெரு, வார்டு எண்.18 காதர் பேட்டை , வார்டு எண் 18 மற்றும் 30 காக்கா பாளையம் மற்றும் பெரியார் தெரு வார்டு எண்29 மற்றும் 32 , பைத்தூர் ரோடு முதல் அம்பேத்கார் நகர் ரோடு மற்றும் குறுக்கு தெருக்களுக்கு தார்சாலை, சிமெண்ட் சாலை, மழைநீர் வடிகால் மற்றும் சிறு பாலம் அமைத்தல் பணி. | 20 | 250.00 |
| 2 | ஆத்தூர் நகராட்சிக்குட் பட்ட வார்டு எண் 2உப்புஓடை, வார்டு எண் 32 அம்பேத்கர் நகர் மெயின் ரோடு மற்றும் குறுக்கு தெருக்கள், வார்டு எண்31 வ.உ.சி குறுக்கு தெருக்கள் வார்டு எண் 15 மற்றும் 16 புதுப்பேட்டை மெயின் ரோடு மற்றும் குறுக்கு தெருக்கள், வார்டு எண் 1, 6 மற்றும் 7ல் முல்லைவாடி மற்றும் கோட்டை மெயின் மற்றும் குறுக்கு தெருக்கள், வார்டு எண் 17 , 24 மற்றும் 19 அமீர் தெரு காந்தி நகர் மற்றும் பழைய பேட்டை மெயின் ரோடு மற்றும் குறுக்கு தெருக்கள் ஆகிய பகுதிகளில் தார்சாலை,சிமெண்ட் சாலை, மழை நீர் வடிகால் மற்றும் சிறு பாலம் அமைத்தல் பணி | 30 | 250.00 |
| | | மொத்தம் | 500.00 |

மேற்கண்ட பணிகளுக்கு 22.12.2020ல் தலைமை பொறியாளர் சென்னை அவர்களால் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு 06.08.2021ல் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு 09.09.2021ல் பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணிக்கு கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| சிறப்பு சாலைகள் திட்ட நிதி தொகை (வட்டியுடன் கூடிய கடன் தொகை– TUFIDCO) | ரூ.450.00 இலட்சம் |
| நகராட்சி பங்களிப்பு தொகை | ரூ. 50.00 இலட்சம் |
| மொத்தம் | ரூ.500.00 இலட்சம் |

சாலைப்பணிகளுக்காக பெறப்படும் கடன் தொகையினை மாநில நிதிக்குழு பரிந்துரை மான்யத்தில் பிடித்தம் செய்யப்படுவதினால் நகராட்சியில் பணிகளை கவனிக்க பெரும் நிதி பற்றாக் குறை ஏற்படும் என்பதனாலும் கடன் தொகையினை நகராட்சியால் பிற வருவாய் இனங்களில் இருந்து செலுத்துவதற்கு வழிவகை இல்லாததினாலும் நிதி ஒதுக் கீட்டினை கடனாக பெற்று சாலைப் பணிகளை மேற்கொள்வதினால் நகராட்சிக்கு பெரும் கடன் சுமை ஏற்படும் என்பதால் நிதி சுமையை குறைக்கும் நோக்கத்தில் சிறப்பு சாலைகள் திட்டத்தில் துவக்கப்படாத கீழ்காணும் பணிகளை இத்திட்டத்திலிருந்து ரத்து செய்ய வேண்டிய பணிகளின் விபரம்.

| வ.எண் | வார்டு எண் | சிப்பம் எண் | சாலையின் பெயர் | சாலையின் வகை | நீளம் மீ | தொகை (ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 19 | | பாரதியார் தெரு | B.T | 75.00 | 3.90 |
| 2 | 18 | | காதர்பேட்டை | B.T | 75.00 | 3.90 |
| 3 | 18 | | காதர்பேட்டை | B.T | 75.00 | 3.90 |
| 4 | 29 | | பெரியார் தெரு | B.T | 75.00 | 19.30 |
| 5 | 29 | | பைத்தூர் சாலை | B.T | 75.00 | 3.90 |
| 6 | 32 | | பாலம் இணைப்பு சாலை | B.T | 75.00 | 3.90 |
| 7 | 18 | | காதர்பேட்டை –1 | C.C | 130.00 | 4.10 |
| 8 | 18 | | காதர்பேட்டை –1 | C.C | 150.00 | 3.50 |
| 9 | 18 | 1 | காதர்பேட்டை குறுக்குதெரு | C.C | 160.00 | 4.40 |
| 10 | 18 | | காதர்பேட்டை குறுக்கு–குறுக்குதெரு–1 | C.C | 150.00 | 4.10 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11 | 18 | | காதர்பேட்டை குறுக்கு-குறுக்குதெரு-2 | C.C | 150.00 | 4.10 |
| 12 | 18 | | காதர்பேட்டை குறுக்கு-குறுக்குதெரு-3 | C.C | 150.00 | 4.10 |
| 13 | 29 | | பெரியார் தெரு | C.C | 100.00 | 2.35 |
| 14 | 15 | 2 | புதுப்பேட்டை மெயின்ரோடு தென் – வட சாலை | C.C | 200.00 | 6.25 |
| 15 | 15 | | புதுப்பேட்டை மெயின்ரோடு கிழ – மேல் சாலை | C.C | 200.00 | 6.25 |
| 16 | 15 | | குறுக்குசாலைகள் | C.C | 150.00 | 4.70 |
| 17 | 7 | | முல்லைவாடி கிழ – மேல் குறுக்கு | C.C | 75.00 | 2.40 |
| 18 | 6 | | கிழ்பாரி தெரு | C.C | 150.00 | 5.30 |
| 19 | 6 | | கிழ்பாரி தெரு | C.C | 85.00 | 2.70 |
| 20 | 6 | | கிழ்பாரி தெரு | C.C | 185.00 | 5.80 |
| | | | | | 2485.00 | 98.85 |

20 சாலைப்பணிகளை ரத்து செய்து தருமாறும் ரத்து செய்யப்பட்ட சாலைகளை மாற்று சாலை மேம்பாட்டு திட்டத்தில் முழு மான்யமாக நிதி ஒதுக்கீடு செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பி நிர்வாகஅனுமதி பெறுவதற்கு தனி அலுவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம்.

2. நகராட்சி நிதி சுமையை குறைக்கும் நோக்கத்தில் சிறப்பு சாலைகள் திட்டத்தில் துவக்கப்படாத பணிகளை இரத்து செய்து சாலை மேம்பாட்டு திட்டத்தில் முழு மான்யமாக நிதி ஒதுக்கீடு செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்ப தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம்.

**4.** நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல் முறை ஆணை ந.க.எண் **9787/2021/சி1**, நாள்**28.07.2020**1ன்படி ஆத்தூர் நகராட்சியில் காலியாக உள்ள ஆணையாளர் பணியிடத்தின் பொறுப்புகளை இந்நகராட்சியில் பொறியாளராக பணிபுரிந்து வரும் திரு.அ.வெங்கடாசலம் அவர்களுக்கு **28.07.2021** முதல் ஆணையாளர் பணி பொறுப்புகளை முழுகூடுதல் பொறுப்பு வழங்கி கவனித்து வர உத்திரவிடப்பட்டுள்ளது. மேலும் G.O(Ms)No153 personnel and Administrative reforms (FR IV) Department . நாள்05.122017ல் தெரிவித்துள்ளபடி A&B பிரிவு அலுவலர்கள் முழு கூடுதல் பொறுப்பு வகித்தால் தற்போது உண்மையான பதவியில் பெற்று வரும் சம்பளத்தில் 1/5 பாகம் அல்லது கூடுதல் பதவியின் சம்பளத்தில் பாதி இதில் எது குறைவோ அதனை பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப் பட்டுள்ளது. எனவே அன்னாருக்கு முழுகூடுதல் பொறுப்பு வழங்கப்பட்ட ஆணையாளர் பணியிடம் B பிரிவு என்பதால் மேற்காணும் அரசாணையின்படி சம்பளம் கணக்கீட்டு ஒவ்வொரு மாதத்திற்கும் வழங்க தனிஅலுவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. தனிஅலுவலர் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம்.(ந.க.எண்**2018 /2021/சி1**)

5. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான நாள்கடை **எண் – 4ஜ** உரிமத்திற்கு எடுத்து நடத்தி வருகின்ற **திரு.அய்யாவு** என்பவர்மேற்படி கடையினை அவரும் **திரு.க.விஜயகுமார் த/பெ.கணேசன்** என்பவரும் இணைந்து நடத்தி வந்த நிலையில் தனது உடல்நலம் மற்றும் குடும்ப சூழ்நிலை காரணமாக தொடர்ந்து கூட்டாக இணைந்து மேற்படி கடையினை நடத்தி

வரமுடியாத சூழ்நிலையில் கடையின் பொறுப்புகளை திரு.க.விஜயகுமார், த/பெ.கணேசன் என்பவரிடம் ஒப்படைத்து மேற்படி கடையினை திரு.க.விஜயகுமார் , த/பெ.கணேசன் என்பவரே நடத்தி வருகின்ற நிலையில் மேற்படி கடையின் உரிமத்தினையும், மேற்படி கடைக்கு செலுத்தியிருக்கும் வாடகை வைப்புத் தொகை, மின் இணைப்பு வைப்புத் தொகை அனைத்தையும் தனது பெயரில் இருந்து தன்னுடைய அனு போகதாரராக உள்ள திரு.க.விஜய குமார், த/பெ.கணேசன் என்பவரின் பெயருக்கு பெயர் மாற்றம் செய்து தரும்படி கேட்டு 12.10.2021–ந் தேதியில் கடிதம் சமர்ப்பித்துள்ளார்.

திரு.க. விஜயகுமார் ,த/பெ.கணேசன் என்பவரும் கடையின் பெயர் மாற்றம் தொடர்பாக அரசாணை எண் (நிலை)92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.4) துறை, நாள்.03.07.2007ல் தெரிவித்துள்ளபடி கீழ்க்கண்டவாறு பெயர் மாற்றுக் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை செலுத்தியுள்ளார்.

| | நாள் | சலான் எண். | தொகைரூ |
|---|---|---|---|
| பெயர் மாற்று கட்டணம் | 29.10.2021 | 3602 | 20724/– (12 மாத வாடகைத் தொகை) |
| வைப்புத் தொகை | 29.10.2021 | 3602 | 20724/– (12 மாத வாடகைத் தொகை) |
| பெயர்மாற்றுக் கட்டணம் | 29.10.2021 | 3603 | 500/– |

மேலும் வாடகைத் தொகை மற்றும் சேவை வரியினை நாளது வரை நிலுவையின்றி செலுத்தியுள்ளார். நகராட்சியின் அனைத்து விதிமுறைகளுக்கும் கட்டுப்படுவதாகத் தெரிவித்து 29.10.2021ந் தேதியில் சம்மதக் கடிதம் கொடுத்துள்ளார். மேற்படி இரண்டு கடிதங்களும் தனி அலுவலரின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.4) துறை, நாள்.03.07.2007ல் பத்தி எண்.4 வரிசை எண்.ஏல் அனுமதியற்ற அனுபோக உரிமத்தினை ஒரு முறை மட்டும் பெயர் மாற்றம் செய்து வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அரசாணையில் கண்டுள்ளபடியும், விண்ணப்பதாரர் கேட்டுக் கொண்டுள்ளபடியும் நார்கடை எண் – 4ஐ குத்தகை உரிமையை குத்தகைதாரர் திரு.அய்யாவு என்பவர் பெயரிலிருந்து திரு.க. விஜய குமார் த/பெ.கணேசன் பெயருக்கு பெயர்மாற்றம் செய்வது குறித்து தனி அலுவலரின் அனுமதிக்லாம்.

6. ஆத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் 2020–2021ம் ஆண்டிற்கு ஆண், பெண் தூய்மைபணியாளர்ளுக்கு சீருடைகள் வாங்கவும் அனைத்து தூய்மை பணியாளர்ளுக்கும் சீருடை தையல் கூலி வழங்கவும், ஆகும் உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சத்திற்கு தனி அலுவலரின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1.தனி அலுவலர் அனுமதிக்கலாம்,மேற்கண்ட செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து வழங்கவும் தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

2.அனைத்து ஆண்,பெண்) தூய்மை பணியாளர்களுக்கான சுருடை துணிகளை கோ ஆப்டெக்ஸ் , திருப்பூர் என்ற கூட்டுறவு அரசு நிறுவனத்தில் வாங்கிகொள்ளவும் தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

3. அவசர அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும், நகர மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விநியோக த்திரவும் பட்டியல் தொகையும் வழங்கவும் தனி அலுவலர் அனுமதிக்கலாம்( ந.க.எண் 3231/20221/எச்1) .

தனி அலுவலர்,
ஆத்தூர் நகராட்சி.